72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

**PRESS RELEASE**

**திகதி வரை தடையாணை**

திகதி: 19 March 2023
நேரம்: 12:01 AM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at' ihp.lk


**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at' ihp.lk Twitter: @ravirannaneliya


# மார்ச் மாத வாக்காளர் தீர்மானத்தில் சிறிதும் மாற்றம் இல்லாததோடு, யூ.என்.பி. யின் எழுச்சிக்கான அறிகுறிகளின் மத்தியில் என்.பி.பி./ஜே.வி.பி. எஸ்.ஜே.பி.யை விட தெளிவாக முன்னிலை வகிக்கின்றது.

## *IHP MRP மார்ச் 2023 பொது தேர்தல் வாக்காளர் தீர்மானம் புதுப்பிப்பு*

சமீபத்திய மார்ச் 2023 இலங்கை கருத்துக்கணிப்பு (SLOTS) பிப்ரவரியிலிருந்து சிறிதும் மாறுபடாததோடு, 41% அநேக வாக்காளர்களுடன் என்.பி.பி./ஜே.வி.பி., 30% உடைய எஸ்.ஜே.பி.யை விட தெளிவாக முன்னிலையில் உள்ளதைக் காட்டுகின்றது. யூ.என்.பி. யின் பங்கு இரண்டு புள்ளிகள் உயர்ந்து 6% ஆனது, மேலும் பிழை விளிம்பிற்குள் இருந்தாலும், இது உண்மையான அதிகரிப்பின் ஆரம்ப அறிகுறிகளாக இருக்கலாம்.




வாக்காளர்களின் ஆர்வத்திலே என்.பி.பி./ஜே.வி.பி. சார்பாக ஒரு தொய்வு ஏற்பட்டிருப்பதால், வாக்களிக்கக்கூடிய அனைவருடன் ஒப்பிடும்போது அநேகமாக வாக்காளிக்கக்கூடியவர்கள் இடையே எஸ்.ஜே.பி.யோடு இருந்த வாக்கு வித்தியாசம் 2% குறைந்தது.




மார்ச் 2023 இல் முடியும் நான்கு மாத காலத்தில், மாகாண அளவில் கட்சிகளிடையே ஆன விருப்பிலே மாற்றம் இல்லாதிருப்பினும், சபரகமுவ மாகாணத்திலே என்.பி.பி./ஜே.வி.பி., எஸ்.ஜே.பி.யை விட தெளிவாக

முன்னிலை வகிப்பதோடு ஊவா மாகாணத்திலே எஸ்.ஜே.பி. உடனான இடைவெளியை குறைத்திருக்கின்றது.

IMF உடன்படிக்கை எவ்வித தாக்கத்தையும் மார்ச் மாத கருத்துக்கணிப்பிலே காட்டவில்லை என்று SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மற்றும் IHPன் நிர்வாகப் பணிப்பாளருமான வைத்தியர் ரன்னன்-எலிய கருத்து தெரிவித்த அதே நேரத்திலே, SLOTS ஆய்வின் நுகர்வோர் நம்பிக்கையிலே சிறிய மீட்பு காணக்கூடியதாக இருப்பதனால் இது ஆச்சரியமளிக்கின்றது என்றும் கூறினார். ஆனால் SLOTS மாதிரியில் காணமுடியாத அளவிற்கு மாற்றங்கள் தற்சமயம் மிகவும் சிறிதாக இருக்கலாம் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

முந்தைய அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, January 2023, “IHP MRP Voting Intentions Estimates January 2023. NPP/JVP and SJB running neck-and-neck amongst voters, but no party dominates”, SLOTS Report #2023-03.
Available at https://ihp.lk/publications/docs/SLOTSReport202303.pdf

Institute for Health Policy, February 2023, “IHP MRP Voting Intentions Estimates February 2023. Voters consolidate around the NPP/JVP, SJB and ITAK, with NPP/JVP taking a clear lead”, SLOTS Report #2023-06.
Available at https://ihp.lk/publications/docs/SLOTSReport202306.pdf

## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## முறை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஓர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காணல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. வாக்களிப்பு தீர்மானத்தை Multilevel Regression and Post-Stratification (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்தது. இந்த உடன் தொடர்பு முறை with multiple imputation to account for uncertainties in its modelling குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பதை மதிப்பீடு செய்ய அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்துகிறது.

மார்ச் 2023க்கான MRP மதிப்பீடுகள் மார்ச் 2023 ல் நடத்தப்பட்ட 521 நேர்காணல்கள் மற்றும் ஆகஸ்ட் 31 2021-ஏப்ரல் 9 2023 வரை நடத்தப்ட்ட 10,601 நேர்காணல்களின் மொத்தத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. பிழை விளிம்பு என்.பி.பி./ஜே.வி.பி., எஸ்.ஜே.பி. மற்றும் எஸ்.எல்.எப்.பி. க்கு 4–5% என்றும் பிற கட்சிகளுக்கு 1–3% என்றும் மதிப்பிடப்பட்டது. முந்தைய புதுபிப்பை காட்டிலும் மார்ச் புதுபிப்பு மேலும் சமீபத்திய தரவினை பயன்படுத்துவதால் முந்தைய மாதங்களின் வாக்களிப்பு பங்கு மதிப்பீட்டில் சிறிய மாற்றங்கள் உள்ளன. Multiple imputation என்னும் தரவு கணிப்பு முறையின் எண்ணிக்கை 20 இல் இருந்து 30 க்கு அதிகரிக்கப்பட்டதால் வாக்காளர் பங்கு மற்றும் பிழை விளிம்பின் துள்ளியத்தில் சிறிய மேம்பாடு கிடைத்தது.

MRP என்பது மற்ற நாடுகளில் உள்ள வாக்கெடுப்பு நிறுவனங்களால் சிறிய கூறுகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு அதிகமாக உபயோகப்படுத்தப்படும் ஒரு முறையாகும். குறிப்பாக YouGov, UK Brexit வாக்கெடுப்பு மற்றும் சமீபத்திய UK பொதுத் தேர்தல்களின் முடிவுகளை முன்னறிவிக்கப் பயன்படுத்தியது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, பொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

## நிதியுதவி

இலங்கையில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR) ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் SLOTS ஆய்விற்கு நிதியுதவி அளித்துள்ளனர். ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.